தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு, சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975 ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

திரு. எ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயகத்துக்கு சங்கடம் ஏற்படும் போதெல்லாம் ஜனநாயகத்தைக் காப்போம், அதைக் காப்பதற்கு சபதம் ஏற்போம் என்று சொல்லிய இந்த அரசு இன்றைக்கு சவால் விடுகின்ற அளவில் இதைக் கொண்டுவந்திருக்கின்றது. இந்த அரசு ஜனநாயகம் பரவலாக்கப்படவேண்டுமென்று மனதிலே குறிக்கோள் கொண்டு, தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்று சொல்லி, ஊராட்சி மன்றத் தலைவர்களும் சரி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் சரி, மாநகராட்சித் தலைவர்களும் சரி பொதுமக்களால்தான் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்ற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வரும் இச் சமயத்தில் தேர்தலை ஒத்திவைக்கக் கோரும் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருகின்ற துர்பாக்கியம் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நான் வருத்தப்படுகின்றேன். மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமையை உரிய காலத்தில் கொடுக்காமல் பறிப்பது ஜனநாயகத்துக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்றைக்கு ஓராண்டு காலம் தேர்தல்கள் தள்ளிவைக்கப்பட வேண்டுமென்று இருக்கின்ற இந்தச் சட்டம் மக்களுடைய அடிப்படை உரிமையைப் பறிப்பதாகும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படாமல் இருப்பதே ஜனநாயகத்துக்கு நல்லதல்ல. மேலும் இதை ஒத்திவைப்பதால் இந்தக் கட்சியை வளர்ப்பதற்கும் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதற்கும் இந்தச் சட்டம் பயன்படுகிறது என்பதைச் சொல்லி முடித்துக்கொள்ளுகின்றேன்.

@ 237-238 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. உ. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்துக்கு ஒரு நல்ல விளக்கத்தைப் பெற்றோம். மக்களிடத்திலேயிருந்து வாக்குப் பெற்றவர்களுக்குரிய காலம் முடிந்து விட்டால் ஒழுங்காக மக்களிடத்திலே மீண்டும் வாக்குகள் பெறவேண்டும் என்ற விளக்கத்தைத் தெரிவித்ததற்காக நன்றி செலுத்துகின்றேன். எல்லோருக்கும் தேவையான ஒரு நல்ல கருத்து இது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதை முழுக்க முழுக்க கொள்கையாகக் கொண்டிருப்பது இந்த அரசு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இருப்பினும் ஏன் இதை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று ஆராய்ந்து பார்த்தால்தான், அதிலுள்ள நோக்கங்கள் புலனாகும்.

ஊராட்சி மன்றங்களையும், ஊராட்சி ஒன்றியங்களையும் பொறுத்த வரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் சரி, அல்லது கிராமப்புறத்து மக்களும் சரி, ஊராட்சி மன்றங்களை பல்வேறு வகையாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்ட பிறகு ஊராட்சி மன்றங்களின் மக்கள் தொகை வளர்ந்துள்ளது. ஆகவே, "Re-constitution of Panchayats" என்று சொல்லுவதைப்போல, அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அது ஒன்று. இரண்டாவது, ஊராட்சி ஒன்றியங்களின் வாக்காளர் பட்டியலை நாம் தேர்தலுக்கு முன்னால் தயாரிக்க வேண்டும். இந்த இரண்டையும் செய்யாமல் போனதற்கு என்ன காரணம்? ஊராட்சி ஒன்றியத்தை மாற்றியமைக்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்லி யிருக்கிறார்கள். வருகின்ற பொதுத் தேர்தலையொட்டி, அந்தத் தேர்தலுக்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டும். அதிலே இருக்கின்ற விவரங்கள் மாறிவிடக் கூடாது என்பதால் எந்தவிதமான பஞ்சாயத்துக்களோ, ஊராட்சிகளோ மாற்றியமைக்கப்படக்கூடாது என்று சொல்லியிருக்கின்றார்கள். மேலும், மக்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டு நாம் பழைய பஞ்சாயத்துக்கள் தாம் என்று சொல்லி அதற்காக தேர்தல் நடத்துவது என்பது ஜனநாயகத்துக்கு ஏற்றது என்று எனக்குப் படவில்லை. பொது மக்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு மாற்றி அமைத்து, அதற்குப் பிறகு வாக்காளர் பட்டியலைத் தயாரித்து மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலே தேர்தல் நடத்த வேண்டும். தற்போது பொதுத் தேர்தல் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்கின்ற காரணத்தினாலேதான் ஓராண்டு காலத்திற்கு இப்போது ஒத்தி வைத்திருக்கிறோம். பொதுத் தேர்தல் இந்த ஓராண்டிற்குள் நடந்தால், அதற்குப் பிறகு முறையாக பஞ்சாயத்துக்கள் சீரமைக்கப்பட்டு மக்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள, பிரச்சினை:

1975 அக்டோபர் 27] (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்)

'சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2ம், 3ம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு. நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4.55)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

217. Notification issued with G.O. Ms. No. 136, Commercial Taxes and Religious Endowments, dated 11th February 1975 in regard to reduction of stamp duty on the sale deed in respect of